**வெளிநாடுகளில் இறந்த புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு வருமதிகளாகவுள்ள நட்டஈடு/சம்பளம் மற்றும் அவற்றுடன் பிற நிவாரணங்களையும் கையளித்தல்**

மத்திய கிழக்கு நாடுகளிலும், ரஷ்யாவிலும் இறந்த/புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் குடும்பங்கள் 2015 நவம்பர் 26ஆந் திகதியன்று வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால் ஒழுங்குபடுத்தப்பட்ட நிகழ்வொன்றில் நட்டஈட்டைப் பெற்றுள்ளன. அத்தகைய 34 குடும்பங்கள் பதில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர், மாண்புமிகு கலாநிதி ஹர்ஷ த சில்வா அவர்களிடமிருந்து 50 மில்லியன் இலங்கை ரூபாவைப் பெற்றுக் கொண்டுள்ளன. இது 2015ஆம் ஆண்டிற்காக இந்த அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்ட அத்தகைய மூன்றாவது நிகழ்வாகும்.

இக்கொடுப்பனவுகள் சவூதி அரேபியா, கட்டார், குவைத், இஸ்ரேல், ஓமான், துபாய், ஜோர்தான், பஹ்ரைன் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களின் உதவியுடன் பெற்றுக் கொள்ளப்பட்டன. வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சானது, 2014ஆம் ஆண்டு 180 குடும்பங்களுக்கிடையே நட்டஈடாகவும் சம்பள வருமதிகளாகவும் பிற நிவாரணங்களாகவும் ஏறக்குறைய 195 மில்லியன் இலங்கை ரூபாவை வழங்கியுள்ளது. இவ்வாண்டில் இந்த அமைச்சானது நட்டஈடாக / நன்மைகளாக 116 குடும்பங்களுக்கு 169 மில்லியன் இலங்கை ரூபாவை விடுவித்துள்ளது.

இந்த நிதியங்களில் ஒரு பகுதி வெளிநாடுகளிலுள்ள இயைபுள்ள நீதி மன்றங்களில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டதன் பின்னர் பெற்றுக் கொள்ளப்பட்டன. தொல்லைகள் மற்றும் காயங்களின் விடயத்தில் தூதரகங்கள் நேரடியாக ஆதரவளிப்போர்களிடமிருந்து கொடுப்பனவுகளைப் பெற்றுள்ளன. நலன்பெறுபவர்கள் இந்நாட்டின் சகல பாகங்களில் உள்ளவர்களாகவும் பிரதானமாக கிராமிய பிரதேசங்களில் உள்ளவர்களாகவும் இருந்தனர். வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சும் வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களும் சம்பந்தப்பட்ட நாடுகளிலுள்ள இயைபுள்ள தரப்பினர்களுடன் விசேடமாக தேர்ச்சியற்ற வகுதிகளின் கீழ் சட்டமுறையான வேலைவாய்ப்பில் ஈடுபட்டிருந்த புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு நட்டஈட்டை/ நலன்களை பெறுவதன் பொருட்டு இணக்கப்பேச்சுக்களை நடாத்தியுள்ளன.

மாண்புமிகு பதில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர், வருகைதந்த கூட்டத்தினருக்கு நிகழ்த்திய உரையில் வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்களாகிய புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட நட்டஈட்டை/ நலன்களை அறவிடும் நடைமுறையை துரிதப்படுத்துமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்துரைகள்

வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். அவர் இந்நாட்டின் பொருளாதாரத்திற்குப் புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் பங்களிப்பின் முக்கியத்துவத்தைப் பற்றி வலியுறுத்திக் கூறியுள்ளார். மேலும், மாண்புமிகு பதில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் சிலநாடுகளில் உள்நாட்டுத் தொழிலாளர்கள் எதிர்நோக்குகின்ற கஷ்டங்களை கவனத்திற்கு எடுத்துக் கொண்டு வெளிநாடுகளுக்குச் செல்லும் இலங்கைப் பெண்களின் எண்ணிக்கையைக் குறைப்பதே புதிய அரசாங்கத்தின் நோக்கமாகும் எனக்குறிப்பிட்டுள்ளார். அவர் இலங்கையில் பணியாற்றுகின்ற வேளையில் பொருளாதாரத்திற்கு கூடுதலான பங்களிப்பைச் செய்வதற்கு இலங்கைப் பெண்களுக்கு போதியளவு வாய்ப்புகளுடனான புதிய பொருளாதார சூழல் ஒன்றை உருவாக்குவதே அரசாங்கத்தின் கொள்கையாகும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு
கொழும்பு

2015 நவம்பர் 26